*2023 மார்ச் 24*]

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளில் தேரோடும் வீதிகளில் இருக்கக்கூடிய மின்கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றியமைக்க வேண்டும் என்பதைத் துறை ரீதியாக ஆய்வுசெய்து, அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். அதனடிப்படையில், ஏற்கெனவே, நான்கு திருக்கோயில்களுக்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கின்ற கோயில்களில், முன்னுரிமை அடிப்படையில், எந்தெந்த கோயில்களில் 'மிக அவசரம்' என்பதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலை வழங்கியிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும். அவர் ஏற்கெனவே சொல்லியிருக்கின்ற தொகுதி சார்ந்த கோரிக்கைகளுக்கு துறை ரீதியாக அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணிகளும் நிறைவு செய்யப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**39—**

## எக்ஸ்ரே மற்றும் சி.டி. ஸ்கேன் வசதி

***5296—திரு. இ.மா. மான்ராஜ்:**

*மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஸ்ரீவில்லிபுத்தூர் மருத்துவமனையில் நவீன எக்ஸ்ரே மற்றும் சி.டி. ஸ்கேன் வசதிகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனை, தினந்தோறும் 1,350 புறநோயாளிகளையும்,*

135 உள்நோயாளிகளையும் பெற்றிருக்கின்ற ஒரு மருத்துவமனை. 24 மணி நேரமும் பிரசவம் என்கின்ற வகையில், மாதந்தோறும் 150 பிரசவங்கள் நடைபெற்று வருகின்றன. அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில், இப்போது conventional X–ray என்கின்ற வகையில், தினந்தோறும் 25–லிருந்து 30 பேருக்கு X–ray எடுக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. என்றாலும், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சருடைய அறிவுறுத்தலை, வழிகாட்டுதலைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற, நவீன எக்ஸ்ரேவும், சி.டி. ஸ்கேன் இயந்திரத்தையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். காரணம், ஸ்ரீவில்லிபுத்தூரைப் பொறுத்தவரையில், ஒரு மிகச்சிறந்த ஆன்மிக சுற்றுலா மையமாக இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், மாண்பிற்கினிய உறுப்பினர் அவர்கள் எடுத்துச்சொல்லியிருப்பதைப்போல, சி.டி. ஸ்கேன், நவீன எக்ஸ்ரே கருவிகளை அம்மருத்துவமனையில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ் அவர்கள்.

**திரு. இ.மா. மான்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துமனையில் உள்ள உள்நோயாளிகள், புறநோயாளிகள் பயன்பெறும் வகையில் ஏனைய மருத்துவ வசதி பெறும்வகையில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், இம்மருத்துவமனைக்கு 7 மாடிகள் கொண்ட அடுக்குமாடிக் கட்டடம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வத்திராயிருப்பு, அரசு பொது மருத்துவமனையில் பெண்கள் வார்டு கட்டடம் இடிந்து பயன்பாடற்ற நிலையில் உள்ளது. எனவே, பெண் நோயாளிகளுக்கு புதிய கட்டடம் அமைத்துத் தருமாறும், மேலும், இம்மருத்துவமனைக்கு குடிநீர் வசதி இல்லாத காரணத்தினால், புதியதாக 10,000 லிட்டர் OHT அமைத்துத் தருமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

*2023 மார்ச் 24*]

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் வட்ட அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரை, இப்போதும்கூட CEmONC கட்டடம் ஒன்று, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, 6 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுக் கொண்டிருக்கிறது. மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகளுக்கான பராமரிப்புப் பிரிவு கட்டடப் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாது, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் விபத்தில் காயமடைந்து வருபவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு, 25 இலட்சம் ரூபாய் செலவில் இரத்த வங்கிக் கட்டடம் ஒன்றும் அம்மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்குட்பட்ட கோமாப்பட்டி துணை சுகாதார நிலையம் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், வா.புதுப்பட்டி துணை சுகாதார நிலையம் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கோட்டையூர் துணை சுகாதார நிலையம் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. தற்போதுகூட அவர் தொகுதியில், இடையன்குளம் துணை சுகாதார நிலையம் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மல்லி துணை சுகாதார நிலையம் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், இராமசாமிபுரம் துணை சுகாதார நிலையம் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், குன்னூர் வட்டார பொது சுகாதாரப்பிரிவு கட்டடம் 50 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாது, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில், 25 இலட்சம் ரூபாய் செலவில் நலவாழ்வு மையக் கட்டடம் ஒன்று கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ் அவர்கள்.

**திரு. இ.மா. மான்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையிலுள்ள கட்டடங்கள் மிகவும் மோசமான சூழ்நிலையில் உள்ளன. எனவே, அந்த மருத்துவமனைக்குப் போதிய கட்டட வசதி மற்றும் குடிநீர் வசதி செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீண்ட பட்டியலைத்தெ தெரிவித்திருக்கிறேன். ஒரு தொகுதியில், இத்தனை கட்டடங்கள் குறுகிய காலகட்டத்திற்குள் வருமா என்பது கேள்விக்குறி. ஆனாலும், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, அது ஒரு சிறந்த ஆன்மிக வழிபாட்டுப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்திட வேண்டுமென்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, இவ்வளவு பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல, இப்போதும்கூட 6 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் CEmONC கட்டடமும், 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரத்த வங்கிக் கட்டடமும் அந்த மருத்துவமனை வளாகத்திற்குள்ளாகவே கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும், குடிநீர் வசதியைப்பற்றிக் கேட்டிருக்கிறார். உடனடியாக ஆய்வு செய்து, அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.

**டாக்டர் சி. சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட, மொடக்குறிச்சி தாலுகா மற்றும் கொடுமுடி தாலுகாவில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆனால், அங்குள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சுற்றுச்சுவர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லை. இதனால், தெரு நாய்கள் மற்றும் மது பிரியர்கள் மது அருந்திவிட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குள் வருவதால், பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அங்குள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் நோயாளிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் சுற்றுச்சுவர் வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*2023 மார்ச் 24*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பதுபோல, இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையான சுற்றுச்சுவர், இந்த நிதியாண்டில், 15–வது நிதி ஆணையத்தின்மூலம் பெறப்படுகிற நிதியின்மூலம், கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோலார்பட்டியிலுள்ள அரசு தாலுகா மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்படுகின்றது. அங்கே, மருத்துவர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உடனடியாக மருத்துவர்களை நியமனம் செய்து தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலுக்கேற்ப, 1,021 மருத்துவர் பணியிடங்களை M.R.B.–ன்மூலம் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான தேர்வுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 2, 3 வாரங்களில் அந்தத் தேர்வுப் பணிகள் முடிவுறும் நிலையில் இருக்கின்றன. 1,021 பணியிடங்களுக்கு 25,000 மருத்துவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். அவர்களில் 1,021 மருத்துவர்களைத் தேர்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மருத்துவமனைக்குத் தேவையான*

மருத்துவர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**40—**

## சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***10274—திரு. ச. அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதி, நீலாங்கரை சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென் சென்னை பதிவு மாவட்டத்திலுள்ள நீலாங்கரை சார் பதிவாளர் அலுவலகம் தற்போது தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. நீலாங்கரை சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நிலத்தைத் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் தேர்வு செய்யப்பட்டபின், சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

**திரு. ச. அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதியில் 1–11–1996 அன்று தலைவர் கலைஞர் ஆட்சியில் நீலாங்கரையில் சார்–பதிவாளர் அலுவலகம், தனியாக முதல் தளத்தில் 1,300 சதுர அடி கொண்ட அலுவலகமாகத் துவங்கப்பட்டது. இந்த அலுவலகம், போதிய இட வசதியில்லாமல் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்தில் நாளொன்றுக்கு